மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதிலளித்திருக்கிறேன். அரசின் நிதிநிலைமையைப் பார்த்து, அதைப்பற்றி நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு அவர்களின் வருமான வரம்பு, விடுதியிலே இருந்து இருக்கின்ற தூரம் ஆகியவற்றின் அடிப்படையிலே எடுத்துக் கொள்கிறார்கள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலேயை, ஒரு வேளை உணவுக்கு வழியில்லாமல் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையை கணக்கிலெடுத்து, அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு தனி கவனம் செலுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற நிலைமைகளை உணர்ந்து தான், ஏற்கனவே அரசு அறிவுரை குழு அமைத்து, அவர்கள் மாணவ, மாணவிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அதிலே, அந்தக் குழுவிலே இருக்கிறார்கள். அவர்களும் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சபை கூட்டத்தின் கடைசி நாள் ஸ்டேட் முழுவதும் ஸ்ட்ரைக் ஏற்படக்கூடிய சிட்சுவேஷன் வரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. திரு கே. டி. கோசல்ராம் என்ற எம். பி. ஒரு ஊழியரை அடித்து. . .

(முற்பகல் 10.20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு கடைசி நாள். எல்லாவற்றையும் இன்றைக்கே எடுத்துக் கொள்வது என்பது கடினமான காரியம். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்று எடுத்துக் கொள்ளப் போகிறோம்.

திரு. ரா. உமாநாத்: எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. ஒருவரை ஒரு ரெஸ்பான்சிபிள் எம். பி. அடித்துஇருக்கிறார். அவரை அரஸ்ட் கூட பண்ணவில்லை.

1982 பிப்ரவரி 19] [திரு. ரா. உமாநாத்]

What the people would think about the house. Atleast ask the Minister to make a Statement about it.
அல்லது ஒரு அட்ஜார்ன்மென்ட் மோஷனோடு இந்த தீர்மானத்தையும் எடுத்துக் கொள்ள ரூலை சஸ்பெண்டு செய்ய தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கப் பட்டிருப்பதாக திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ரகுமான்கான் போன்றவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். தாங்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறீர்கள். எல்லாவற்றையும் இன்றைக்கே எப்படி எடுத்துக் கொள்ள முடியும்?

திரு ரா. உமாநாத்: இது முக்கியமான விஷயமாக இருப்பதால் இன்றைக்கு கடைசி நாள் கூட்டமாக இருப்பதால் வேறு வழியில்லை என்பதால் ஜனங்கள் அஜிட்டேட் ஆக்கக்கூடிய, இந்த அவையை அச்சப்படுத்தக்கூடிய விஷயமாக இருப்பதால் எம். பி. அடித்த விஷயம்

Let the Ministers make a Statement or take this Adjournment Motion also by suspending the relevant Rule

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 3,4 பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டால் மின்துறை விவாதத்தை எப்போது எடுத்துக் கொள்வது? எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம், திரு நெடுமாறன் திரு ஆண்டித் தேவர் எல்லோரும் பேசியாக வேண்டும். அதற்குப் பிறகு இந்தச் சபையை ஒத்தி வைத்தாக வேண்டும். இது சிறிய சம்பவம் தான், பெரியதாகத் தெரியவில்லை. (குறுக்கீடு) அடித்ததாகச் சொல்கிறார். ஆனால் அவர் இல்லை என்று. ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறார். ஆகவே சபையிலே இதை எப்படி எடுப்பது என்று தெரியவில்லை.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: ஒரு ரெஸ்பான்சிபிள் எம். பி. அந்தமாதிரிச் செய்யவில்லை என்று கூறியிருக்கிறார். பத்திரிகையிலே வந்து இருக்கிறது. இங்கே இர்ரெஸ்பான்சிபிள் ஸ்டேட்மெண்டை உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: இர்ரெஸ்பான்சிபின் ஸ்டேட்மெண்ட் என்று எப்படி சொல்லமுடியும்?

The intervention of Mr. Haja Shariff is only irresponsible
தங்கள் அனுமதியோடுதான் நான் பேசியிருக்கிறேன். திரு. ஹாஜா செரீப் தான் மோஸ்ட் இர்ரெஸ்பான்சிபிளாகச் சொல்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னார். தாங்கள் சொன்னீர்கள். சரியாகப் போய் விட்டது. அவ்வளவுதான்.

திரு. வி. இருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாகவே நாங்கள் இதையெல்லாம் சொல்லவேண்டுமென்றாலும் அதற்கு விதியில் இடமில்லை என்று அப்படியே போய்க் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது, நான் மாலையிலே வர முடியல்லை. நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செல்கிற சாலையில் வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள். ஒன்று வெடித்து......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு-குழப்பம்) நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை கேட்டுவிட்டு, நான் பேசலாமா வேண்டாமா என்று சொன்னால் நன்றாக இருக்கும். எழுந்தவுடனே பேசக் கூடாது என்றால்?

திரு துரைமுருகன் : நாவலர் அவர்கள் பேசக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : அதுதான் சொன்னீர்களே விதியைத் தளர்த்தி, இந்தப் பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை, இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். இருக்கின்ற பிரச்னையை நான் விளக்கிச் சொல்கிறேன், அப்பொழுது இருக்கின்ற நிலைமைகளைத் தெரிந்து கொள்ளலாம். அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டுமென்றுதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 58ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்னைகளை எடுத்தக் கொள்ளக் கூடாது என்றுள்ள விதி 58-தளர்த்தப்பட்டு இன்று (19-2-82) இரண்டுப் பொருள்கள் எடுத்துக் கொள்ளப் பெறலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வாடிப்பட்டி ராவலர்கள் ஊராட்சிப்பள்ளியில் பணிபுரியும் சீனியம்மாளைத் துன்புறுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர். மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் உதவி ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி எம். சீனியம்மாள் என்பவரை 1-2-82 அன்று காலை பள்ளியில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் அவரை பலவந்தமாக